உ
சிவமயம்



# சைவநீதி

# SAIVANEETHI


| | | | |
|---|---|---|---|
| மலர் 10 | விய - ஆடி | June - July 2006 | இதழ் 4 |




உ

சிவமயம்


சைவநீதி

SAIVANEETHY

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

# சைவநீதி

மலர் 10 விய - ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 4



## நலம் தரும் பதிகங்கள்

### பதிகம் 14

### மனக்கவலைகள் ஒழியவும் பிறவாநிலை எய்தவும் பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

பலதலங்களையும் தரிசித்துக் கொண்டு சம்பந்தப் பெருமான் சீர்காழி வருகின்றார். அச் சமயத்தில், பெரியோர்களின் விருப்பப்படியே, நல்லூர்ப் பெருமணம் எனுமிடத்தில் சம்பந்தப்பெருமானுக்கு திருமணம் நடைபெறுகின்றது. திருமணம் முடிந்ததும் சம்பந்தப் பெருமான், நல்லூர்ப் பெருமண ஊரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வேண்ட கர்ப்பக் கிரகத்தில் அரும்பெரும் ஜோதி தோன்றியது. அச்சமயத்தில் இப்பஞ் சாக்கரப் பதிகத்தைப் பாடிய வண்ணம் அனைவருடனும் சோதியில் கலந்தார்.

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவா
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள்
இல்லார் ஏனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே. 5

மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே. 8

(இதன் தொடர்ச்சி 2ம் பக்கத்தில்)

# பொருளடக்கம்

பக்கம்


1. பன்னிரு திருமுறைகள் ........................................ 3
2. மாறும் மனம் ........................................ 7
3. அம்பிகை சிவபூசை செய்தல் ........................................ 8
4. அங்கதேசம் ........................................ 12
5. திருவருட்பயன் ........................................ 16
6. மயில்வாகனக் கடவுள் ........................................ 18
7. சற்றே விலகி இரும் பிள்ளாய் ........................................ 22
8. சந்தேகம் தெளிதல் ........................................ 24


---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண் பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9


கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

**சைவநீதி** இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

- இதழ் நிர்வாகிகள் -



# பன்னிரு திருமுறைகள்

A. S. இராதாக்கிருஷ்ணன்
B. A. Dipin Edu
ஆசிரிய ஆலோசகர்

சைவசமயத்தின் இரு கண்கள் எனக் கொள்ளப்படுபவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்திர நூல்களும் ஆகும். தெய்வீகத்தன்மை கொண்ட திருமுறைகள் "திருநெறிய தமிழ்" என்றும் திராவிட வேதம் என்றும் "அருள்நூல்" என்றும் போற்றப்படுகின்ற திவ்விய நூலாகும். தெய்வத்துக்குச் சூட்டும் பாமாலை எனப் புகழ்ந்துரைக்கப்படும் திருமுறைகள் தில்லை என்னும் திருச்சிற்றம்பலத்தில் கிடைக்கப் பெற்றன. முதலாம் இராச இராச சோழனின் பணிப்புரையின் பிரகாரம் நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைப் பதினொன்றாக வகுத் தருளினார். முதல் ஏழு திருமுறைகளும் தேவாரப் பதிகங்களாகக் கொள்ளப்படுகின்றன. தேவாரப் பதிகங்களை "அடங்கன் முறை" எனவும் சிறப்பித்தழைப்பர். 1ம், 2ம், 3ம் திருமுறைகளைத் திருஞான சம்பந்தரும் 4ம், 5ம், 6ம் திருமுறைகளைத் திருநாவுக்கரசரும் 7ம் திருமுறையைச் சுந்தரமூர்த்தி நாயனாரும் செய்தருளினார். தேவாரத் திருப்பதிகங்களைச் செய்தருளியமையால் இவர்களை "தேவார முதலிகள்" எனவும் சிறப்பித்தழைப்பர். முதல் மூன்று திருமுறைகளிலும் 16,000 திருப்பதிகங்கள் மொத்தமாக இருந்தன. இவற்றில் 384 திருப்பதிகங்கள் மாத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கப்பெற்றுள்ள திருப்பதிகங்களில் 4158 திருப்பாடல்கள் உண்டு. 4ம், 5ம், 6ம் திருமுறைகளில் மொத்தமாக 4900 திருப்பதிகங்கள் இருந்தன. இவற்றில் 313 திருப்பதிகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன்கண் 3066 திருப்பாடல்கள் காணப் படுகின்றன. 7ம் திருமுறையில் மொத்தமாக 38000 திருப்பதிகங்கள் இருந்தன. இவற்றில் நூறு திருப்பதிகங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எமக்குக் கிடைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 1026 திருப்பாடல்கள் ஆகும்.

தேவாரம் என்பது தெய்வத்தின் மீது அன்புடன் பாடப்படும் இன்னிசைப் பாடல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. வடமொழியில் அமைந்துள்ள கருத்துக்களைத் தூய செந்தமிழில் தேவாரங்கள் எடுத்துரைப்பதால் தமிழ் வேதம் என்று சிறப்பித்தழைக்கப் படுகின்றன. முன்னோர்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் பாடப் பெற்ற தேவாரப் பதிகங்களைத் "திருக்கடைக்காப்பு" எனவும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற திருப் பதிகங்களைத் "தேவாரம்" என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற தேவாரப் பதிகங்களைத் 'திருப்பாட்டு' எனவும் அழைத்தனர். திருஞானசம்பந்தரால் பாடியருளப்பட்ட முதலாந் திருமுறையில் இயற்கையழகு வர்ணனை, மக்களின் வாழ்க்கை முறை, இறைவனது

**என்ஐமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்
முன்நின்று கல்நின் றவர் 771**

பகைவரே இதற்கு முன்பு தன் தலைவனது வலிமை அறியாமல் அவனுக்கு எதிர் நின்று போரேற்று இறந்த பின்பு நடு கல்லில் நின்ற மறவர் பலராவர், ஆகையால், (நீவிரும் அங்ஙனம் நடுகல்லில் நில்லாமல் உம் உடலோடு நிற்க விரும்பினால்) என் தலைவன் எதிரே போர் ஏற்று நீற்காதீர்.

திருக்கோலம் திருக்கோயில்களின் சூழலமைவுகள், புராண இதிகாசக்கதைகள், நிகழ்ச்சிகள், வரலாற்றுக் குறிப்புக்கள் சைவசித்தாந்தக் கருத்துக்கள் என்பன மிக அழகுற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் திருமுறையிலுள்ள பாடல்கள் ஞான சம்பந்தரால் செய்தருளப்பட்ட அற்புத நிகழ்வுகளைக் குறித்த பாடல்கள் ஆகும்.

மூன்றாம் திருமுறைப் பாடல்களிலும் சம்பந்தர் செய்தருளிய அற்புத நிகழ்வுப் பாடல்களையும் மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் மேலான திருவைந்தெழுத்து என்னும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தைப் போற்றிப் பாடியருளியுள்ள திருப்பதிகங்களையும் உள்ளடக்கியுள்ளன. திருநாவுக்கரசரால் செய்தருளப்பட்ட நான்காந் திருமுறையிலுள்ள திருப்பதிகங்களில் அவரால் மேற்கொள்ளப்பட்ட அற்புத நிகழ்வுகளைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. ஐந்தாம் திருமுறைப் பாடல்கள் அவரால் மேற் கொள்ளப் பட்ட அற்புத நிகழ்வுகளையும் திருவைந் தெழுத்தின் பெருமையையும், பிரணவத்தின் மகிமையையும் எடுத்துரைப்பனவாகவுள்ளன. ஆறாந் திருமுறைப்பாடல்கள் தாண்டகம் என்னும் செய்யுள் வகையைச் சேர்ந்தனவாகும். சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற ஏழாந் திருமுறைப் பாடல்கள் நம்மைத்தோழமையாக உனக்குத் தந்தோம் என்று ஆட்கொண்டருளிய இறைவனை நாயனார் வெகுவாகப் புகழ்ந்தும், போற்றியும் வாழ்த்தியும், வணங்கியும், இரந்தும், ஏசியும் பலவிதமாகப் பாடிய பாங்கில் அமைந்துள்ளன.

எட்டாந்திருமுறையை மாணிக்கவாசகர் செய்தருளினார். இதில் திருவாசகம் திருக்கோவையார் என்னும் நூல்கள் அடங்குகின்றன. "திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்" எனச் சிறப்பித்தழைக்கப்படும் தன்மையில் படிப்போர் நெஞ்சை உருகச்செய்யும் தன்மையில் அமைந்தவை திருவாசகப் பாடல்களாகும். பஞ்சபுராண தோத்திரப் பாடல்கள் ஓதும் ஒழுங்கில் இடம்பெறும் திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அழகிய பொன்னம்பலவனே பாடல்களைப் பிரதி செய்த சிறப்புக்குரியது. திருவாசகத்தில் இடம்பெறும் சிவபுராணப் பாடல்கள் ஆன்மீக வளர்ச்சியை எடுத்தியம்பும் சிறப்புத்தன்மைகளைக் கொண்டவை. திருவாசகத்தில் எமக்குக் கிடைத்த பாடல்கள் 658 பாடல்களாகும். இறைவனின் பெருமையையும் ஆன்மாவின் சிறுமையையும் ஆன்மாவுக்குத் தெய்வம் என்ப தோர் சித்தம் உண்டாக்கும் தன்மையையும் இறைவன் ஆன்மாக்களுக்கு எளியவனாகி வந்து ஆட்கொண்டருளும் விதத் தன்மைகளையும் சிறப்பாக எடுத்துக்கூறும் நூலாகத் திருவாசகம் விளங்குகின்றது. மாணிக்கவாசகரினால் செய்தருளப்பட்ட திருக்கோவையாரை திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் சிறப்பித்தழைப்பர்.

"பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று இறைவன் பணித்தருள மாணிக்கவாசகர் திருக்கோவையாரைப் பாடியருளினார். கோவை என்பது தமிழிலுள்ள தனிச்சிறப்பில் அமைந்த இலக்கிய வகைகளுள் ஒன்று. அது கோர்த்து ஒழுங்கு செய்யப் பெற்றதால் கோவை எனப் பெயர் பெற்றது. இறைவனுக்கும் உயிர்களுக்கும் நிகழும் அன்புக்கு அறி குறியாகத் தலைவன் இறைவனோடு ஆளுகின்றனர்.

**கான முயல் எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது** 772

காட்டில் ஓடும் முயலின் மேல் (குறி) தவறாமல் எய்த அம்பை ஏந்துவதைவிட, வெட்டவெளியில் நின்ற யானை மேல் எறிந்து (குறி) தவறிய வேலை ஏந்துவது பெருமை தருவதாம்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை திருக் கோவையார் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

ஒன்பதாந் திருமுறை என்பது ஒன்பது அடியார் களால் பாடப்பெற்றது. திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள் திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர், சேந்தனார் என்னும் ஒன்பது அடியார்களால் ஒன்பதாந் திருமுறை செய்தருளப்பட்டது. திருவிசைப்பா திருப்பல் லாண்டு என்னும் நூல்கள் இத்திருமுறையினுள் அடங்கப்பெறுகின்றன. சேந்தனார் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாட ஏனைய எண்மரும் திருவிசைப்பாவைப் பாடியருளி னார்கள். திருவிசைப்பாவில் இருபத்தொன்பது திருப்பதிகங்களும், அவற்றில் எமக்கு கிடைக்கப்பட்ட பாடல்களாக 301 பாடல்களும் அடங்குகின்றன. திருப்பல்லாண்டில் மொத்தமாக ஒரே ஒரு திருப்பதிகம் காணப்படுகின்றது. இதில் பதின்மூன்று பாடல்கள் உண்டு. பத்தாந் திருமுறை திருமூலச்சித்தரால் செய்யப்பட்டது. இதில் திருமந்திரம் என்னும் நூல் அடங்குகின்றது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களைக் கொண்டது. இதில் 3000 பாடல்கள் உண்டு. வடமொழியில் அமைந் துள்ள ஆகமக் கருத்துக்களைத் தமிழ் மொழியில் திருமந்திரம் கூறுவதால் 'தமிழ் ஆகமம்' என அழைக்கப்படுகின்றது. பதினொராந் திருமுறை நாற்பது பிரபந்தங்களைக் கொண்டது. இப்பிரபந்தங் களில் நமக்குக் கிடைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 1400. திருவாலவாயுடையார் (இறைவன்) காரைக் காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமான், நக்கீரதேவர் கல்லாட தேவர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடிகள் அதிரவடிகள், பட்டினத்தார் நம்பியாண்டார் நம்பி ஆகிய பன்னிரண்டு அடியார்கள் இத் திருமுறையைச் செய்தருளினர். திருவால வாயுடையார் என்னும் இறைவன் திருமுகப் பாசுரம் என்னும் பிரபந்தத்தினை செய்தருளினார். இதில் ஒரு பாடல் காணப்படுகின்றது. காரைக்காலம்மையார் திருஆலங்காடு மூத்த திருப்பதிகம் I, திருஇரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்னும் பிரபந்தங்களைச் செய்தருளினார். ஐயடிகள் காடவர்கோன் சேத்திரத் திருவெண்பாவையும் சேரமான் பெருமான் பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா ஆகிய பிரபந்தங்களையும் நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதியந்தாதி , திருஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவ பாணி, கோபப் பிரசாதம், கார் எட்டு, போற்றித் திருக்கலிவெண்பா ஆகிய பிரபந்தங்களையும், திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தத்தையும், திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற பிரபந்தத்தையும், கல்லாடதேவர் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பிரபந்தத்தையும் கபிலதேவர் மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை, சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை 1, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்களையும், பரணதேவர் சிவபெருமான் திருவந்தாதியையும், இளம் பெருமானடிகள்

**பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்றுஅதன் எஃகு** 773

அஞ்சாமலும் இரக்கமின்றியும் பகைவரோடு போரிடும் கக மறத்தைப் பேராண்மை என்று சொல்லுவர். ஆயினும் அப் பகைவருக்கு ஒரு தாழ்வு வந்த போது இரக்கப்பட்டு அதை நீக்கும் பொருட்டு அவருக்கு உதவி செய்வதை அப் பேராண்மையின் கூர்மை (உச்ச நிலை) என்பர் மறநூலார்.

சிவபெருமான் திரு மும்மணிக்கோவையையும், அதிராவடிகள் மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையையும், பட்டினத்தடிகள் கோயில் நான்மணிமாலை திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்ப முடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருப∴து ஆகிய பிரபந்தங்களையும் நம்பியாண்டார் நம்பி திருநாரையூர் திருவிரட்டை மணிமாலை கோயிற்றிருப்பண்ணியார் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, திருநாவுக்கரச தேவர் திருவேகாதச மாலை என்னும் பிரபந்தங்களையும் செய்தருளினர். இவ்விதம் பன்னிரண்டு அடியார்களால் நாற்பது பிரபந்தங்கள் செய்தருளப்பட்டன. நம்பியாண்டார் நம்பியால் பதினொரு திருமுறைகள் வகுக்கப்பட்டன. பிற்காலத்தில் சேக்கிழாரால் பாடப்பெற்ற பெரிய புராணத்தின் பெருமையையும் சிறப்பினையும் உணர்ந்து சைவப்பெரு உலகத்தோர் அவ்வரிய நூலினையும் திருமுறைக்குள் உள்ளடக்கிக் கொண்டனர். இவ்விதம் திருமுறைகள் பன்னிரெண்டாக அமைவு பெற்றன. பெரிய புராணத்தில் 4286 செய்யுள்கள் உண்டு. பெரிய புராணம் ஓர் சமய இலக்கியமாகும். அறுபத்திமூன்று நாயன்மார்களினதும், ஒன்பது தொகை அடியார்களினதும் வாழ்க்கைச் சிறப்பை எடுத்துக் கூறும் நூலாகும். அன்பால் நிறைந்த களஞ்சியம் எனப் போற்றப்படும் நூலும் இதுவாகும். சிவபிரான் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்க சேக்கிழாரால் பாடப்பெற்ற பெரிய புராணம் பஞ்சதோத்திரப் பாடல்கள் ஒழுங்கில் இடம்பெறும் நூலாகவும் சிறப்புப் பெறுகின்றது.

திருமுறைப் பாடல்கள் கிடைக்கப்பெற்ற திருத்தலம் தில்லை என்னும் திருச்சிற்றம் பலமாகும். இதனால்தான் திருமுறைப் பாடல்கள் ஓத முன்பும் ஓதிய பின்பும் 'திருச்சிற்றம்பலம்' எனக் கூறுவர். திருமுறைகளைப் பண்ணோடு ஓதுபவர்களை 'ஓதுவார்கள்' அல்லது 'ஓதுவார் மூர்த்தி' என அழைப்பர். பன்னிரு திருமுறைகளிலும் மொத்தமாக 18,497 திருப்பாடல்கள் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. திருக்கோயில்களில் திருமுறைப் பாடல்களை ஓதப் பெறும் பொழுது வரிசை முறையாகப் பன்னிரு திருமுறைகளையும் ஓதமுடியாத விடத்து பஞ்சபுராணப் பாடல்களை ஒழுங்கு முறைப்படி ஓதுவதன் மூலம் திருமுறைப் பாடல்களை ஓதிய சிறப்பினையும் பலனையும் பெற்றிடலாம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகிய ஐந்துமே பஞ்ச புராணங்களாகத் திருமுறைகளில் கொள்ளப் படுகின்றன. பன்னிரு திருமுறைப் பாடல்கள் சைவ உலகுக்குக் கிடைக்கப்பெற்ற பொக்கிஷங்கள் ஞான களஞ்சியமும் அவையே. எனவே அவற்றின் பெருமை உணர்ந்து நாம் அவற்றினை ஓதிப் பயன் பெற்றிடுவோம் என்பதனை மனத்தில் பதித்துச் செயற்படுவோம்.

❁

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்** 774

தன் கையில் இருந்த வேலைத் தன்னைத் தாக்க வந்த போர் யானையைக் கொல்லுமாறு எறிந்துவிட்டு, அடுத்து வந்த வேறுரொரு யானையைக் கொல்வதற்கு வேல் தேடித்திரும்பி வருகின்ற (யானை கொல்லி)மறவன் தன் மார்பில் பாய்ந்திருந்த வேலைக்கண்டு பறித்து மகிழ்ச்சியடைவான்.

# மாறும் மனம்

திருமுருக கிருபானந்தவாரியார்

மனிதனுடைய மனம் கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டேயிருக்கும். 1972ல் கோவை மாநகரில் 'காமகோடி வித்யா மந்திர்' திருப்பணிக்காகத் தொடர்ந்து விரிவுரை செய்து கொண்டிருந்தேன்.

முக்கியமான அன்பர்களிடம் நேரில் அணுகி வசூல் செய்தேன். கோவையில் மிகப் பெரிய மனிதருடைய தமையனாரிடம் சென்றேன். அவர் அன்பாக வரவேற்று, நன்கொடை தந்தார்.

நல்ல உள்ளம் படைத்தவர்களின் விலாசங்களைத் தருமாறு அவரைக் கேட்டேன். அவர் பத்து அன்பர்களின் முகவரியைத் தந்தார். அதில் ஒருவரைப் பற்றி எனக்குத் தெரியும்.

"இவர் விலாசத்தை எழுதிக் கொடுத்தீரே, இவர் தாராள மனம் படைத்தவரல்லவே?" என்றேன். அவர், "சுவாமி! மனம் மாறுகின்ற இயல்புடையது நேற்றிருந்த மனம், இன்றிராது. நேற்று தாராளமானவன் இன்று கஞ்சனாகலாம். இன்று கஞ்சனாயிருப்பவன் நாளை தாராளமாக மாறலாம்," என்றவர் பின்வரும் சம்பவத்தை விவரித்தார்.

"நான் ஒரு சமயம் குடும்பத்துடன் காசிக்குச் சென்றிருந்தேன். கங்கையில் நீராடிக் கொண்டிருந்தபோது தண்ணீர் இழுத்துச் சென்றது. எனக்கு நீந்தத் தெரியாது. கங்கை நீர் வேகமுடையது. இரு கரங்களை உயர்த்தித் தத்தளித்தேன். என் மனைவி முதலியோர் கரையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் நான் தண்ணீரில் விளையாடுவதாக எண்ணினார்கள்.

இன்று நம் வாழ்நாள் முடிந்து விட்டது என்று கதிகலங்கி மதி கலங்கினேன். இந்த அபாயத்தில் ஒரு கல்லூரி மாணவன் கங்கையில் குதித்து என் கரங்களைப் பற்றி இழுத்து வந்து கரை சேர்த்தான். உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் ஈரத் துணியை மாற்றி, உலர்ந்தது உடுத்திக் கொண்டு பெட்டியைத் திறந்து ஆயிரம் ரூபாய் எடுத்தேன். என்னைக் காப்பாற்றியவனுக்குப் பரிசு தரக் கருதினேன். அந்த வாலிபனைக் காணவில்லை.

மறுநாள் அவன் குளிக்க வருவான். அப்போது தருவோம் என்று எண்ணினேன். மறுநாள் அதே நேரத்தில் ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு கங்கைக்குச் சென்றேன். அந்த மாணவனைத் தேடினேன்.

அதற்கு மறுநாளும் ஆயிரம் ரூபாய் எடுத்துக் கொண்டு கங்கை நதிக்குச் சென்றேன். அவன் கிடைக்கவில்லை. நாலாவது நாள் மாணவன் குளிக்க வந்திருந்தான். ஆனால் அப்போது நான் பணம் கொண்டு போகவில்லை. "தம்பி! என் இருப்பிடத்துக்கு வா," என்று நான் தங்கியுள்ள இடத்துக்கு அழைத்துச் சென்றேன்.

பணப் பெட்டியிடம் சென்றேன். அப்போது என் மனம் எண்ணுகின்றது. 'இவன் என்ன அதிகச் சிரமப்பட்டு விட்டான். தண்ணீரில் இருந்து இழுத்துக் கரை சேர்த்தான். இவ்வளவுதானே? இதற்கு ஆயிரம் ரூபாய் தர வேண்டுமா? பத்து ரூபாய் தந்தால் போதும் தானே?"

பெட்டியைத் திறந்து பணம் எடுக்கின்றபொழுது இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்தேன். அந்த மாணவனிடம் நெருங்கியபோது ஐந்து ரூபாய் நோட்டை மட்டுமே தந்தேன். மனம் மாறும் இயல்புடையது. நல்ல காரியத்தைச் சட்டென்று செய்து விடவேண்டும், என்றார் அன்பர்.

❀

**விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்**
**ஒட்டு அன்றோ வன்க ணவர்க்கு** 775

பகைவரைச் சினந்து நோக்கி விரிவாகத்திறந்த கண், அவர் ஒளி வீசும் வேலைப் பளிச்சென்று எறிய அதற்குக் கூசி, முன்பு திறந்திருந்த நிலைக்கு மாறாக மூடிஇமைக்குமானால், அதுவும் உண்மை மறவர்க்குப் புறங்கொடுத்தலாகுமன்றோ!



# அம்பிகை சிவபூசை செய்தல்

பூசை ச. அருணவசந்தன்

உலகில் சிவபூசையொன்றே தலை சிறந்ததாகும். அந்தப்பூசையின் பெருமையை விளக்கவும் வழிகாட்டவும் சிவபெருமானின் ஒரு கூறாகத் தோன்றிய பார்வதிதேவி ஓயாது சிவபூசை செய்கின்றாள். இதனால் அவளுக்குச் சிவபூசைச் செல்வி என்பது பெயராயிற்று.

அவள் ஆதியூழியின் தொடக்கத்தில் சிவபூசை செய்தாள். அவளுடைய பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்குக் காட்சி யளித்து அவளைத் தனது இடப்பாகத்தில் சேர்த்துக் கொண்டார். இருவரும் சேர்ந்து உலகினைப் படைத்தனர். அவள் ஊழிக்கால இரவில் சிவபூசை செய்ததை நினைவு கூறும் வகையில் சிவராத்திரியைக் கொண்டாடுகிறோம்.

பார்வதி சிவபூசை செய்வதைப் பதினெண் புராணங்களும், திருமுறைகளும் தல வரலாறுகளும் சிறப்பாகக் குறிக்கின்றன. மனமகிழ்சியைப் பெறவும். உலக உயிர்கள் நலம் பெறவும் பார்வதி ஓயாது சிவபூசை செய்கின்றாள். அவள் குயிலாகவும், மயிலாகவும், பசுவாகவும், யானையாகவும் இருந்து அனேக தலங்களில் பூசை செய்ததைத் தலபுராணங்கள் குறிக்கின்றன.

பஞ்சபூதத் தலங்களுள் மூன்றில் அம்பிகை கடுந்தவம் புரிந்ததுடன் சிவபூசையும் செய்து மகிழ்கின்றாள். காஞ்சியில் அவள் சிவபூசை செய்தது தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. காஞ்சிபுரத்தில் அவள் மண்ணால் சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்தாள். திருஆனைக் காவலில் பெருகிவரும் நீரைத் திரட்டி லிங்கம் அமைத்து வழிபட்டாள்.

திருவண்ணாமலையில் பவளப்பாறைமீது நின்று கடுந்தவமும் சிவபூசையும் செய்தாள். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவளை அணைத்து மகிழ்ந்ததுடன் தன் உடலில் ஒரு பாதியையும் அளித்தார். அம்பிகையின் சிவபூசையால் இந்த உலகம் செழிப் படைகின்றது. ஆதலின் நமது வாழ்வு செழிப் படைய அம்பிகை சிவபூசை செய்யும் தலங்கள் சிலவற்றைச் சிந்திக்கலாம்.

பலதலங்களில் அம்பிகை சிவபூசை செய்திருந்தாலும் அவள் காஞ்சிபுரத்தில் செய்த சிவ பூசையே சிறப்புப் பெறுகின்றது. காஞ்சியில் அம்பிகை சிவபூசை செய்ததைக் காஞ்சிப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன. அதன்படி:-

ஒரு சமயம் உமாதேவியார் கயிலைமலை மீது வீற்றிருந்த சிவபெருமானின் கண்களை விளையாட்டாக மூடினாள். அவருடைய கண்கள் மூடப்பட்டதால் சூரியனும் சந்திரனும் தங்கள் ஒளியை இழந்தனர். உலகங்கள் இருளில் மூழ்கின. ஊழிக்காலம் தோன்றியே விட்டதோ என்று உலக உயிர்கள் பதை பதைத்து அஞ்சி நடுங்கிச் சோர்ந்து வீழ்ந்தன. அதனால் பெருமான் தனது மூன்றாவது கண்ணான நெற்றிக் கண் ணைத் திறந்தார். இதனால் உலகில் ஒளிபரவிய போதும் நெருப்பும், புகையும் எங்கும் பரவியது.

**விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்**
**வைக்கும்தன் நாளை எடுத்து** 776

கடந்து போன தன் வாழ்நாட்களை எல்லாம் எடுத்து எண்ணி, அவற்றுள் போரில் (விழுப்) புண்படாத நாட்களை எல்லாம் வீணாக கழிந்த நாட்களோடு சேர்ப்பான் உண்மை மறவன்.

உயிர்கள் மேலும் அஞ்சின. பார்வதியும் அஞ்சி தனது கைளை எடுத்தாள். உலகில் சூரியனும் சந்திரனும் ஒளிபெற்றுப் பிரகாசித்தனர். பெருமான் நெற்றிக்கண்ணை மூடிக் கொண்டார். வெப்பமும் புகையும் குறைந்தன.

பார்வதி அதைக்கண்டு அஞ்சி அவரை வழிபட்டாள். அவர் அவளை நோக்கி "உயிர்களுக்கு இதத்தையும் நன்மையையும் செய்ய வேண்டிய நீ மாறாகத் துன்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்கினாய். இது நல்ல தல்ல, இக்குற்றம் நீங்கும் பொருட்டுப் பூவுலகில் சென்று வழிபாடு செய்க" என்றார். அதைக் கேட்டுப் பார்வதி நடுங்கினாள். ஒருவாறு மனம் தெளிந்து சிவபெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு பூவுலகம் வந்தாள். முதலில் இமய மலைச்சாரலில் தவம் செய்தாள். பிறகு காசியை அடைந்தாள். அங்கு சிவபூசை செய்ததுடன் அன்னபூரணியாக வீற்றிருந்து அறம் செய்தாள். பிறகு பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு காஞ்சி மாநகரை அடைந்தாள். சிவபெருமான் அவ்விடத்தில் சிவபூசை செய்யுமாறு கூறினார். அம்பிகை காஞ்சியிலுள்ள அனேக சிவாலயங்களை ஆகம முறைப்படி அர்ச்சித்துப் போற்றினாள். சிவபூசையின் ஓர் அங்கம் அடியவர்களுக்கு அறம் செய்தலாகும். பார்வதியும் அதைச் செய்ய விரும்பினாள். சிவபெருமான் அவளிடம் இரண்டு நாழிகை நெல்லைக் கொடுத்து அறம் செய்யும்படி கூறினார். அவள் அதனைத் தனது ஆற்றலால் பெருக்கி உலகாணித் தீர்த்தக் கரையில் ஓர் அறச்சாலை அமைத்து அங்கு ஓயாது அறம் செய்தாள். (அவள் அங்கு அறம் செய்யும் அழகையும் சிறப்பையும் சிவபெருமானே அடியவர்போல் வந்து பார்த்து மகிழ்ந்தாராம். அப்படி வந்து கோயில் கொண்ட இடத்திற்கு "அறம் வளர்த்தீசுவரம்" என்று பெயர் வழங்குகின்றது.

அவள் அறம்செய்த இடம் **'உலக அறவிக் கோட்டம்'** எனப்பட்டது. அதுவே இந்நாளில் காமாட்சியம்மன் கோயிலாகத் திகழ்கின்றது.

பின்னும் பார்வதிதேவி சிறப்பான சிவபூசையொன்றை செய்யத் திருவுள்ளம் கொண்டாள். சிவபூசைக்காகக் காப்பு அணிந் தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் காப்பீசர் என்று பெயர் பெற்றது. பிறகு கடகங்களை அணிந்தாள். அப்போது அவள் வழிபட்ட லிங்கம் கடகேசர் என்றும் கங்கணீசர் என்றும் பெயர் பெற்றன. பிறகு காஞ்சியின் மையத்தில் ஓடும் கம்பையாற்றின் கரையில் உள்ள காலம் கடந்து வேதமயமாக நிற்கும் மாமரத்தினை அடைந்து அதன்கீழ் வீற்றிருந் தாள். அங்கு மஞ்சள் காப்பணிந்து நீராடினாள். அவள் உடல்வாசத்தாலும் பக்தியாலும், அந்நீர் தனிநிறமும் மணமும் பெற்று ஓடியது. அதனால் அதற்கு மஞ்சளாறு எனப் பெயராயிற்று, அதனை விரும்பிய சிவபெருமான் அதன் நடுவினில் சிவலிங்கமாகத் தோன்றினார். பின்னர் அச்சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு ஆனந்தக் கூத்தாடினார். அதனால் அவருக்கு **'மஞ்சள்நீர்க் கூத்தர்'** என்பது பெயராயிற்று.

அம்பிகை வைராக்கியமான வெள்ளாடை களை அணிந்தாள். உருத்திராக்கங்களையும் விபூதியையும் தரித்தாள். திலக மண்டலம் தீட்டிக் கொண்டாள்.

ஒருமித்து சிந்தைகொண்டு பஞ்சாட்சர ஜெபம் செய்தாள். பிறகு பூசைக்குரிய பொருட்களைத் திரட்டிக் கொண்டாள். கம்பையாற்றின் கரையில் மணலைக் கூட்டித் தன் அன்பையும் பக்தியையும் கலந்து சிவத்தை நெஞ்சில் தேக்கியவாறு அழகிய சிவலிங் கத்தைச் செய்தாள். அதற்கு மாலைகளையும் ஆபரணங்களையும் சூட்டினாள். ஆகமங்களில்

**சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்**
**கழல் யாப்புக் காரிகை நீர்த்து** 777

உலகெங்கும் பரந்து நிற்கும் புகழை விரும்பி, இங்கு உயிர் வாழ விரும்பாத மறவர், தம் காலில் வீரக்கழலைக் கட்டிக் கொள்ளுதல் ஒரு தனி அழகாம்.

கூறியபடி அதனை அர்ச்சித்தாள். அன்புடன் போற்றி வழிபட்டாள்.

அவள் தன்னைப் பூசைசெய்யும் அழகையும் நேர்த்தியையும் காணச் சிவபெருமான் அங்கு மறைவாக வீற்றிருந்தார். அதனால் அவருக்குக் கள்ளக்கம்பர் என்பது பெயராயிற்று. (காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் கள்ளக் **கம்பர் சந்நிதி** தனியே உள்ளது.)

பலநாட்கள் நகர்ந்தன. அம்பிகை நாளுக்கு நாள் அன்புவளரச் சிவபூசை செய்தாள். அவளுடைய அன்பினைச் சோதிக்க விரும்பிய சிவபெருமான் அருகில் ஓடும் கம்பையாற்றைப் பெருகிவரச் செய்தார். அந்த வெள்ளம் ஊழிக்காலம் போல் பெருகி வந்தது. அதைக் கண்டு அஞ்சிய பார்வதிதேவி தான் பூஜை செய்த சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டாள். கண்களை மூடி ஐந்தெழுத்தை உன்னிச் சிவனைத் தியானித்தாள். வெள்ளம் மேலும் பெருகப் பெருக பார்வதி இன்னும் உறுதியுடன் சிவலிங்கத்தை அணைத்துக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவளுடைய அன்பினால் பெருமான் உருகினார். அவளுடைய மார்பு அழுந்திய சுவடும் கைவளையல் பதித்த சுவடும் அந்த லிங்கத்தில் பதிந்தன. அவற்றைப் பெருமான் அன்பின் அடையாளமாக ஏற்றார். அதனால் அவருக்குத் தழுவக் குழைந்த நாதர், வளைத்தழும்போடு முலைத்தழும்பும் கொண்ட பிரான், கள்ளக் கம்பர் முதலிய பெயர்கள் உண்டாயின.

அவளுடைய தெய்வீக அணைப்பு சிவ பெருமானுக்கு உவப்பை உண்டாக்கியது. அதனால் வெள்ளத்தைத் தணிவித்தார். அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவளுக்குக் காட்சி தந்தார். அவரைக் கண்டு அவள் பணிந்து வணங்கினாள். அப்போது தேவர்கள் முனிவர்கள் உள்ளிட்ட எல்லோரும் அங்கு கூடினர். அவர்கள் சிவபெருமானிடம் தேவியை மணந்து தங்களுக்குத் திருமணக் காட்சியினை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்றார்.

பிறகு ஒரு நல்ல நாளில் அனைவரும் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர். காஞ்சிபுரத்தைத் திருமண நகரமாக அலங்கரித்தனர். சிவபெருமான் கயிலையினின்று புறப்பட்டு வரும்போது பூத வெள்ளமும், தேவர்கள் கூட்டமும், கின்னர, கிரும்புருஷர் வித்தியாதரக் கூட்டமும் கூடிப் பரிவாரங்களாகத் தொடர்ந்து வர காஞ்சி புரத்தில் மாமரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த மணமேடையை அடைந்தார். அவரைத் திருமாலும் பிரமனும் எதிர்கொண்டு அழைத்துச் சென்று மணமேடையில் அமர்த்தினர். லட்சுமி, சரஸ்வதி முதலிய தெய்வப் பெண்கள் பார்வதியை அழைத்து வந்து அவருக்கு வலப் பாகத்தில் அமர்த்தினர். பிரமன் திருமண வேள்வியைச் செய்தான். திருமால் நீர்வார்த்துக் கன்னிகாதானம் செய்தார். முனிவர்கள் வாழ்த்துக்களைக் கூற அரம்பையர்கள் மங்கலங்களைக் கூறி ஆடிப் பாடினர். எங்கும் மகிழ்ச்சி பரவியது.

காஞ்சிபுரத்தில் அம்பிகை பூசித்த லிங்கமே, ஏகாம்பரநாதர் ஆலயத்தில் மூலவராக எழுந்தருளியுள்ளது. அது மண்ணால் ஆக்கப்பட்ட தாதலின் குவளை அணிவிக்கப்பட்டுள்ளது. புனுகுசட்டம் மட்டுமே சாத்தப்படுகின்றது.

இது காலங்கடந்த கதையாதலின் எல்லோராலும் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றது. அதனால் இது ஒரே மாதிரியாக இல்லாமல் கூடியும் குறைவுமாக விரித்தும் சுருக்கியும் சொல்லப்பட்டுள்ளது. காஞ்சிப் புராணங்கள் உமாதேவியார் சிவனின்

---

**உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும்சீர் குன்றல் இலர்** 778

போர் வந்தால் சாவுக்கு அஞ்சாமல் போர்க்களத்திற்குச் செல்லும் மறவர், தம் அரசன் அது வேண்டாம் என்று சினந்து தடுத்தாலும் தம் மறம் தளர்தல் இல்லை.

கண்களைப் புதைத்தல், சிவனிடம் விடை பெறுதல், பூவுலகிற்கு வருதல், காஞ்சியில் சிவபூசை செய்தல், வெள்ளம் பெருகி வருதல், உமாதேவியார் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொள்ளுதல், சிவன் வெளிப்பட்டு அருளுதல், பின்னர் திருமணம் நடைபெறுதல், ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் உமை சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டுள்ள சிற்பத்தை அமைத்துள்ளனர். காஞ்சிபுரத்தில் மட்டுமின்றி தென்னகமெங்கும் உள்ள ஆலயங்களில் தூண் சிற்பமாகவும் இக்காட்சி அமைக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

உன்னதமான இக்கதையை விளக்கும் வகையில் பலதலங்களில் தழுவக் குழைந்த நாதர் சந்நிதி அமைக்கப்பட்டிருந்தாலும் அறியாமல் பலர் இப்பெயரை போட்டுக் குழப்பியுள்ளனர். சிலர் இவரைக் குழந்தை ஈசுவரர் என்றும், கொழுந்தீசர் என்றும் எழுதி வைத்துள்ளனர்.

நன்றி - சிவமஞ்சரி

❁

# சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

***சைவசித்தாந்த பிரவேச / பால / பண்டிதர் தேர்வு – 2006ல்***

***சித்தி பெற்றோர் விபரம்***

**பிரவேச பண்டிதர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. வாஹினி ஸ்ரீதரன் | கொழும்பு | 2ம் பிரிவு |
| 2. | திரு. அரியநாயகம் ஸ்ரீதர் | வாழைச்சேனை | 3ம் பரிவு |
| 3. | செல்வி. காரத்திகா ஜீவரட்ணம் | வாழைச்சேனை | 2ம் பிரிவு |
| 4. | செல்வி. டிஹாசி - நேமிநாதன் | வாழைச்சேனை | 2ம் பிரிவு |

**பாலபண்டிதர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. சர்மிளா கணேசன் | அக்கரைப்பற்று | 2ம் பிரிவு |
| 2. | செல்வி. கவிதா ஏகாம்பரநாதன் | சித்தங்கேணி | 2ம் பிரிவு |

**சித்தாந்த பண்டிதர்**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி. ஜெயசித்ரா ஜெயசிங்கம் | காரைநகர் | 2ம் பிரிவு |
| 2. | செல்வி. சறோஜினிதேவி தம்பிராசா | நல்லூர் | 2ம் பிரிவு |
| 3. | திரு. தவராசா குமரன் | மல்லாகம் | 2ம் பிரிவு |
| 4. | செல்வி. சியாமினி இராசரத்தினம் | அச்சுவேலி | 2ம் பிரிவு |
| 5. | திரு. யோகநாதன் சிவகுமார் | வாழைச்சேனை | 2ம் பிரிவு |
| 6. | திரு. சண்முகராஜா சிறிகாந்தன் | யாழ்ப்பாணம் | 2ம் பிரிவு |
| 7. | திரு. தவராசா விக்னேஸ்வரன் | மன்னார் | 2ம் பிரிவு |

**இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்தது ஒறுக்கிற் பவர்** 779

தாம் கூறிய சூள் (வஞ்சினம்) தப்பாதபடி போர் செய்து சாகவல்ல மறவரை, அவ்வஞ்சினம் தப்பியதற்காகத் தண்டிக்க வல்லவர் யாவர்?

# அங்கதேசம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

தேசம், நாடு, தேயம் என்பதும் இதன் இன்னொரு வழக்காறு. ஐம்பத்தாறு தேசங்கள் பழைய இதிகாசங்களிலே பேசப்படுகின்றது. இராமாயண, பாரத காலத்தில் இருந்தே இ∴து தொடரக் காணலாம். இக்கண்ணோட்டத்தையும் தாண்டி - இவ்வுடம்பு - நாம் சுமந்து செல்லும் நடமாடும் ஒரு அமைப்பு. இவ்வுடல் அமைப்பு தாவரத்தில் இருந்து மனிதம் வரை இருக்கிறது. இதை இயற்கை என்பர். இறைபடைப்பு என்பர். செயற்கையான விஞ்ஞானம் இவ்வமைப்பைச் செய்யமுடியாது. தாயுமானார் தான் மனித உடம்பை அங்கதேசம் என வடிவம் கொடுத்துள்ளார்.

**அறிவாரும் இல்லையோ ஐயோ - என்னை**
**யார் என்று அறியாத அங்கதே சத்தில்**
**வறிதே காமத்தீவில் சிக்கி - உள்ள**
**வான் பொருள் தோற்கவோ வந்தேன் நான் தோழி**

ஆனந்தக் களிப்பு 20

அங்கதேசத்தில் சரீரமாகிய தேசத்தில், வறிதே அறியாமை மயமாய் இருக்கிறது.

இ.ள்:- சகியே! என்னை (இன்னானென்று) உணர்வாருமில்லையோ? அந்தோ! என்னை இன்னானென்று உணராத சரீரமாகிய தேசத்தில், யாதொரு பயனின்றியே (பவக்கடல் சூழ்ந்த) காமமாகிய தீயினில் அகப்பட்டு, என்னிடத்தில் உள்ள மேலாகிய ஞானத்தினை இழக்கவோ வந்தனன். சங்கர, சங்கர, சம்பு சங்கரன் (சம் - கரன்) நலத்தைச் செய்பவன் சம்பு. ஆனந்தத்தைக் கொடுப்பவன், சிவன் மங்கலமானவன், உடம்பைக் கேவலமாக மதிக்கலாமா? உயிரின் இல்லம் உடம்பு. உடம்பு அழியும்பான்மையது. உயிர் அழியாது. உடம்பை வளர்த்து, உயிரை வளர் என்பது மந்திரவாக்கு.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி, முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' எனச் சொன்னவர் சீர் திருத்தவாதி நாவலர் பெருமான்தான். இவ் வுடம்பிலே புற உறுப்புகளும் உண்டு. அக உறுப்புகளும் உண்டு. அக உறுப்புகளை விஞ்ஞானம் படம்பிடித்துக் காட்டி மருத்துவம் செய்கிறது. தோலாலே போர்க்கப்பட்ட இவ்வுடல் இரத்தம், நிணம், தசை, என்பு, மற்சைபோன்ற பல பொருட்களால் ஆனது. மெய், வாய், கண், மூக்கு, செவி புறக்கரணங்கள், ஞானேந்திரியங்கள். வாய், கரங்கள், கால்கள், குதம், ஜனனேந்திரியம். உடம்பில் 5 கோசங்கள் உள. அவை அன்னமய கோசம், பிராமணமய கோசம், மனோமயகோசம், ஆனந்த மயகோசம், விஞ்ஞான மயகோசம், இவ்வுடம்பினுள்ளே இருதயம், சுவாசப்பை, மூளை, (அதனோடியைந்த மனம், கணையம், பித்தப்பை, குண்டிக் காய்கள் அமைந்துள்ளன. உயிரும் உறையும் இவ்வுடம்பில், உயிரையும், மனத்தையும் காணமுடியாது. இவற்றினியக்கமே வெளிப்பாடு, மனம் மனிதனுக்குத்தான் உண்டு என்ற கொள்கை இன்று உடைத் தெறியப்பட்டுள்ளது. எல்லா உயிரினங்களும் மனமுடையன என்பது இன்றைய உள வியலாளர் முடிவு. உயிரையும் மனத்தையும் உருவறியமுடியாது. கண்ணின் பார்வையும் கண்ணும் போன்றதே மூளையும் மனமும்,

**புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற் பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கது உடைத்து** 780

படைமறவர் தமக்கு வாழ்வளித்துக் காத்த அரசரின் கண்களில் நீர் பெருகுமாறு போர்க்களத்தில் சாகப் பெற்றால், அச்சாவு இரந்தாவது பெற்றுக் கொள்ளத்தக்க பெருமை உடையது.

எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதான மென்ற பேச்சின் உண்மை இதனாற் புரிகிறது மூளை, மனம் இன்றேல் உடம்பின் இயக்கமே இல்லை. மூளையில் பல இரசாயன அமைப்புகள் உண்டு. உணர்வு ரௌத்ரம் போன்ற திறன் பாடுகள் இவற்றால் உண்டா கின்றன. நினைவாற்றல், அதீதவிவேகம், திறமை, சிந்தனை வளம் எல்லாமே மூளை யோடு தொடர்புடையன. இன்று மனவளக்கலை வளர்கிறது. அவ்வண்ணமே மனஇயல் நிபுணர் களால் மனோ நோய்கள் மாற்றப்படுகின்றன. இந்த மனோதத்துவம் இன்று கல்வியில் முக்கிய இடம் வகிக்கிறது. இருதயத்தையே வெளியே எடுத்து மருத்துவம் பார்க்குமளவுக்கு மருத்துவம் கூர்ப்புடையது. ஆக இலௌகீக வாழ்விலும் சரி, ஆத்மீக வாழ்விலுஞ்சரி இவ்வுடம்பு முக்கிய இடம் வகிக்கிறது. ஆரோக்கியமான வாழ்வும், ஆரோக்கியமான மனமும் முக்கியமானவை. ஆகவே, நாம் உடம்பையும் உயிரையும் பேணவேண்டுமென, திருமூலர் எடுத்தியம்புகிறார்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே.**

பாம்புதன் செட்டையைக் கழற்றுவது போல், இந்த உயிரும், உடம்பு பொருந்தாதவேளை உதறித்தள்ளி விட்டுப் போகும் என்கிறது கீதை.

இந்த உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை, இணைப்பை பறவைக்கருவான முட்டைக்கும் அது குஞ்சானபின் முட்டைக் கோதைக் கொத்தி உடைத்துப் பறப்பதற்கும் உவமானமாகத் திருவள்ளுவனார் பாடியுள்ளார்.

**குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே**
**உடம்பொடு உயிருடை நட்பு**

திருக்குறள் 338

குடம்பை - முட்டை, புள் - பறவை

உடம்போடு உயிருக்குள்ள (தொடர்பு) உறவு, தான் இருந்த முட்டை தனியே இருக்க இதைவிட்டுப் பறவை பறந்தாற் போன்றது. இந்த உடம்பும், உயிர்ப்பும் எமக்கு எப்படிக் கிடைத்தது. ஓர் பெண்ணும், ஓர் ஆணும் உடல் உறவு கொண்டதினாலே தான் வந்தது. இதை இணைவிழைச்சு எனக் கீழ்க் கணக்கு எழுதி வைத்திருக்கிறது. இருமடந்தையரோ, இரு ஆண்களோ இணைந்து சந்ததி விருத்தி செய்யமுடியாது. மேலைத்தேயங்கள் சிலவற்றில் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் இணைய சட்டங்கள் உருவாயுள்ளன. இந்தக் கருவுற்பத்தி பற்றிப் பட்டினத்துச் சுவாமிகள் ஒரு நெடும் பாடல் பாடியுள்ளார். சுடலை சேர்வது சொற்பிரமாணம் என அப்பர் பாடியமைக்கிசைய, தோற்றம் தொட்டு இறுதிவரை என்ன நிகழ்கிறதென்பதை உடற்கூற்று வண்ணம் பேசுகிறது.

**ஒருமட மாதும் ஒருவனுமாகி இன்பசுகம் தரும்**
**அன்பு பொருந்தி உணர்வு கலங்கி ஒழுகிய விந்து**
**ஊறு சுரோணித மீது கலந்து**
**பனியில் ஓர் பாதி சிறுதுளி மாது பண்டியில் வந்து**
**புகுந்து திரண்டு பதும வரும்பு கபடமி தென்று**
**பார்வை மெய்வாய் செவி கால்கள் என்று**
**உருவமுமாகி உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும்**
**நிறைந்து மடந்தை உதரமகன்று புவியில் விழுந்து**
**யோகமும் வாரமும் நாளுமறிந்து**
**மகளீர்கள்சேனை தாவரணை யாடை மண்பட உந்தி**
**உதைந்து கவிழ்ந்து மடமயில் கொங்கை**
**அமுதமருந்தி**
**ஓரறிவு ஈரறிவு ஆகிவளர்ந்து**

உடற் கூற்றுவண்ணம் 1 -12 வரிகள்

சுக்கிலம் - விந்து, சுரோணிதம் - பெண்கருமுட்டை, சுரோணிதம் சிவப்பானது, சுக்கிலம் வெண்மையானது. இதுதான் குருதியில் உள்ள வெண்சீவ, செஞ்சீவ அணு எனச் சொல்கிறார் காஞ்சிப் பெரியவர். ஆலய வெளிச்சுற்றுச் சுவரிலே தீட்டப்பட்ட வெண்ணிறமும், செங்காவி நிறமும் இந்த சுக்கிர, சுரோணித மென்பர் சுகிசிவம் அவர்கள். குழந்தையைக் குழவியென்பர். நாம் அம்மியில்

அரைக்க உதவும் கல்குழவியெனப்படும். தாயின் வயிற்றில் உருவாகும் குழந்தையின் உருவம் ஒரு குழவிக்கல் போலவே அமைகிறது. இந்தக் குழவி போன்றதே இலிங்க ஆவுடையாரின் மேல் அமைந்த இலிங்க வடிவம். இப்படிக் குழந்தை வளர்ந்து ஆடியோடி படித்து விவாகம் செய்து ஒரு பரம்பரையையே உருவாக்குகிறது. இந்த உடல் வந்த வரலாற்றை அப்பரடிகள் வெகு இலாவகமாக வடித்துள்ளார்.

**கருவாகிக் குழம்பிருந்து கலித்துமூளை**
**கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி**
**உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்**
**வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்**
**மருவாகி நின்னடியே மறவே னம்மான்**
**மறித் தொருகாற் பிறப்புண்டேல் மறவா வண்ணம்**
**திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்**
**செம்பொ னேகப்பனே திகைத்திட்டேனே**

திருமுறை : 6

பிறப்பின் நோக்கம் பிறப்பினின்றும் விடுபடுவது. கல்வியின் இலட்சியம் வாலறிவன் நற்றாள் தொழல். மனக்கவலை மாற்ற மருந்து தனக்குவமை இல்லாதான் தாள்சேர்தல். இந்த உடம்பின் இழிவை மணி மொழியார் கூறி அதனின்றும் விடுதலைகாண வேண்டும் என்பதையும் தன்வாய் மொழியிற் கூறியுள்ளார். வாய்மொழிவாசகம்

**மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை**
**என்புதோல் போர்த்த**
**குப்பா யம்புக் கிருக்க கில்லேன்**
**கூவிக் கொள்ளாய் கோவேயோ**
**எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்**
**ஆரமு தேயோ**
**அப்பா காண ஆசைப்பட்டேன்**
**கண்டாய் அம்மானே**

ஆசைப் பத்து 2

**சீவார் ந்தீமொய்த் தழுக்கொடுதிரியுஞ்**
**சிறுகுடில் இதுசிதையக்**
**கூவாய் கோவே கூத்தாகாத்தாட்**
**கொள்ளுங் குருமணியே**
**தேவா தேவர்க் கரியானே சிவனே**
**சிறிதென் முகநோக்கி**
**ஆவா வென்ன ஆசைப் பட்டேன்**
**கண்டாய் அம்மானே**

மேற்படி 3

**மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல்**
**வீறிலி நடைக்கூடம்**
**தொடர்ந்தெனை நலியத் துயருறுகின்றேன்**
**சோத்தம்எம் பெருமானே**
**உடைந்துநைந் துருகி உன்னொளி நோக்கி**
**உன்திருமலர்ப் பாதம்**
**அடைந்துநின் றிடுவான் ஆசைப்பட்டேன்**
**கண்டாய் அம்மானே**

மேற்படி 4

**அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி**
**அடியே னுடை யாக்கை**
**புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்**
**விடையாய் பொடியாட**
**எளிவந் தென்னை ஆண்டு கொண்ட**
**என்னா ரமுதேயோ**
**அளியேன் என்ன ஆசைப்பட்டேன்**
**கண்டாய் அம்மானே.**

மேற்படி 5

**பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்துளுத்தசும்**
**பொழுகிய பொய்க்கூரை**
**இத்தை மெய்யெனக்கருதி நின்று இடர்க்கடற்**
**சுழித்தலைப் படுவேனை**

அதிசயப் பத்து 7

**புழுவினாற் பொதிந்திடு குரம்பையிற்பொய்த**
**னையொழி வித்திடும்**
**எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரானென்னு**
**டையப்பன் என்றென்று**
**தொழுத கையினராகித் தூய்மலர்க் கண்கள்**
**நீர் மல்குந் தொண்டர்க்கு**

வழுவிலா மாமலர்ச் சேவடிக்கண்நம் சென்னி
மன்னி மலருமே

சென்னிப்பத்து 8

“உயர்போன பின் நாறுகின்ற உடம்பு. ஊரெலாங்கூடி ஒலிக்க அழுதிட்டும் பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு, சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு, நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே” என மூலமுனி சொன்னவண்ணம் இந்த உடம்பின் பிரிவு சொல்லுமாறென்னே. எனவே நாம் எடுத்ததேகம் விழுமுன்னே இவ்வுடம்பாற் தீமை செய்யாமல் நன்மையே புரியவேண்டும். நீதி நெறிவழியே நம்மை இட்டுச் செல்ல வேண்டும். இவ்வுடம் பின் துணையால் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். எனவேதான் அப்பர் பெருமானார் திருவங்கமாலை பாடினார். வேறெம் மொழியிலும் இப்படிப் பாடவில்லையெனப் பன்மொழிவல்லார் கூறுகின்றனர். எனவே மனமும் உடலும் இணைந்து காலையும் மாலையும் கடவுளை வணங்கி இந்த உடம்பை இறைமயமாய், சிவமயமாய் மாற்றுவோமாக.

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலி தேருந்
தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ
சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான்திற
மெப்பொழுதும் செவிகாள் கேண்மின்களோ

மூக்கே நீ முரலாய் முதுகாடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை மூக்கே
நீமுரலாய்

வாயே வாழ்த்து கண்டாய் மதயானை யுரிபோர்த்தும்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை வாயே
வாழ்த்து கண்டாய்

நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கைமணாளனை நெஞ்சே நீ
நினையாய்

கைகாள் கூப்பித்தொழீர் கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள்
கூப்பித் தொழீர்

ஆக்கையாற் பயனென் அரன் கோயில் வலம் வந்து
பூக்கை யாலட்டிப் போற்றி யென்னாதவிவ்
ஆக்கையாற் பயனென்

கால்களாற் பயனென் கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற்
பயனென்

உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்குற்றார்
ஆருளரோ

இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்
பல்கணத்து எண்ணம்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்
கிறுமாந்து இருப்பன் கொலோ

தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு
நான்முகனும்
தேடித்தே டொணாத தேவனை என்னுளே
தேடிக்கண்டு கொண்டேன்.

எனவே நாம் நின்றும் கிடந்தும் இருந்தும் என்றும் அவன்றாள் தொழுவோமாக. ஆன்மீக விடுதலையே இப்பிறவியின் இலக்கு. இவ்விலக்கை அடைய அங்கதேசம் நல்ல உபகாரியாம் என்பதை மனிதம் உணர்ந்து, வாழ்வைச் செந்நெறியில் இட்டுச் சென்று சிவனோடு ஐக்கியப்படுவதே ஐக்கிய முத்தியாம் சிந்திப்போம்.

# திருவருட்பயன்

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்

## ஐந்தாம் அதிகாரம்

### குருவடிவாய் வருவது திருவருள்

**அறியாமை யுண்ணின் றளித்ததே காணும்**
**குறியாகி நீங்காத கோ.**

பாவுரை: அறியாமை உள்நின்று அளித்ததே - கண்ணாற் காணப்படாமல் ஆன்மாக்களில் நின்று (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கு தொழில்களையும் செய்து) இரட்சித்து வந்த அதுவே, காணும் குறிஆகி (எஞ்சியதாகிய அருளைச் செய்தற்காக) காணக்கூடிய குருவடிவை எடுத்து, நீங்காத கோ - உடனாய் நின்று ஆட்கொள்ளும் திருவருளாகும்.

### அருளே ஆணவத்தைப் போக்கத்தக்கது

**அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்**
**சகத்தவருங் காண்பரோ தான்.**

பாவுரை: அகத்து உறுநோய்க்கு - ஒரு வீட்டிலிருப்பவனுக்கு வந்த பிணியை, உள்ளினரன்றி - அவ்வீட்டிலுள்ளவர் அறிவரேயன்றி, அதனை - அந்த நோயை, சகத்தவருங் காண்பரோ - தூரத்திலுள்ளவரும் அறிவாரோ? அறிய மாட்டார்; (அதுபோல ஆன்மாவிலுள்ள மலமாகிய நோயை ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருளறிவதன்றி வேறொன்றும் அறியமாட்டாது)

### குருவைச் சிஷ்யனன்றிப் பிறரறிவார்

**அருளா வகையா லருள்புரிய வந்த**
**பொருளா ரறிவார் புவி.**

பாவுரை: அருளா வகையால் - (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினையும்) மறைந்து நின்று செய்ததுபோல, அருள்புரி வந்த - மானுட வடிவத்தினாலே தன்னை மறைத்து) அருளல் என்னுந் தொழிலைச் செய்ய வந்த, பொருள் - குருவடிவத்தை, புவி ஆர் அறிவார். (பக்குவமுள்ள சிஷ்யனன்றிப்) பூமியில் வேறுயார் அறியத் தக்கவர்? வேறொருவரும் அறியார்)

### பக்குவமில்லாதார் அறியாமைக்குக் காரணம்

**பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்**
**மெய்யிரண்டுங் காணார் மிக.**

பாவுரை: பொய் - நிலையற்றதாகிய உலக இன்பத்திலே கருத்துடையராய், இருண்ட சிந்தை - ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட அறிவினையுடைய, பொறியிலார் - ஞானமாகிய ஒளியைப் பெறாதோர், போதமாம் மெய் இரண்டும் அறிவு மயமாகிய அருளையும் அவ்வருள் அதிட்டித்து நிற்குங் குரு வடிவத்தையும், காணார் மிக - சிறிய மறியமாட்டார்.

### சகலருக்குக் குருவாய் வருதலின் நோக்கம்

**பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வையெனக் காணார் புவி**

பாவுரை: பார்வை என - அவ்வவ்வினத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணையைக் கொண்டு வன விலங்குகளைப் பிடிப்பதுபோல, மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம் - (மனித உருவமாகிய குருவடிவத்தைத்

திருவருளெடுப்பது) மனிதரை நேர் நின்று வசப்படுத்தி ஆட்கொள்தற்காம், புவி - பக்குவ மில்லாதோர் போர்வையெனக் காணார் - அது அருள் போர்த்துக் கொண்ட குருவடிவம் என்பதை அறியார்.

### குரு சாத்திரதீட்சைக்கு இன்றியமையாதவர்

**எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்**
**தமக்கவனை வேண்டத் தவீர்.**

பாவுரை: எமக்கு என் - (குருவினால்) எமக்கு என்னபயன் (என்று கேட்டால்), எவனுக்கு எவை தெரியும் - எவனுக்கு ஞான நூற் பொருள்கள் உள்ளபடி தெரியுமோ, அவ் அத் தமக்கு அவனை வேண்ட - அந்நூற் பொருள்கள் தமக்கு அவனைக் குருவாக வேண்டி நிற்றலால், தவிர் - (குருவின் தேவையை நீயுணர்வாய் ஆதலால் "எமக்கென்" என்னுங் கேள்வியை) விடுவாயாக.

### நயன தீட்சை

**விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்**
**கடனிலிருள் போவதிவன் கண்.**

பாவுரை: விடம் - (ஒருவன் விஷம் தீண்டப் பெற்றால் அந்த) விடமானது, நகுலம் மேவினும் (மீளாது) - கீரி நேரே வந்து நிற்பினும் நீங்காது, பாவகனின் மீளும் - கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரீகனால் நீங்கும், கடனில் - இந்தமுறைமை போல, (திருவருளானது நேரே நின்றும் மலங்களைப் போக்காது)

### மூவகை ஆன்மாக்களுக்கும் அருள் செய்யும் முறை

**அகலத் தருமருளை யாக்கும் வினைநீக்குஞ்**
**சகலர்க்கு வந்தருளுந் தான்.**

பாவுரை: அகலத்து அரும் அருளை ஆக்கும் - விஞ்ஞான கலரிற் பக்குவமுடையார்க்குச் சிவபெருமான் அவர்களது அறிவிலே நின்று அருள்செய்து மலத்தை நீக்குவர். வினை நீக்கும் - பிரளயாகலரிற் பக்குவர்க்கு அவர்களைப் போல முன்னிலையாய் நின்று (ஆணவத்தோடு) கர்மத்தையும் நீக்குவர், சகலர்க்கு தான் வந்து அருளும் - சகலரிற் பக்குவருக்குக் குருவடிவாய் வந்து மும்மலங்களையும் நீக்கியருளுவர்.

### சிவபெருமானே குருவாதல் வேண்டும்

**ஆரறிவா ரெல்லா மகன்ற நெறியருளும்**
**பேரறிவான் வாராத பின்**

பாவுரை:- எல்லாம் அகன்ற - மந்திர முதல் கலையீறாகிய அத்துவாக்களைக் கடந்த, நெறி அருளும் - வீட்டு நெறியை வெளிப்படுத்தி யருளும், பேரறிவான் வாராத பின் - பேரறிவினராகிய சிவபெருமானே குருமூர்த்தங் கொண்டு வாராவிட்டால். ஆரறிவார் - (அவ்வீட்டு நெறியை) அறிய வல்லவர் யார்? (ஒருவருமிலர்)

### இதுவுமது

**ஞான மிவனொழிய நண்ணியிடும் நற்கலனல்**
**பானு வொழியப் படின்**

பாவுரை:- பானு ஒழிய - ஒளி இல்லாமல், நற்கல் அனல் படின் - சூரியகாந்தக் கல்லில் அக்கினி தோன்றுமாயின். இவன் ஒழிய - அருட்குருவின்றி, ஞானம் நண்ணிடும் - (ஆன்மாவில்) ஞானந் தோன்றும் (சூரியனொளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் அக்கினி தோன்றாதென்பது எப்படிப் பிரசித்தமான உண்மையாகுமோ அப்படியே குரு இல்லாமல் ஆன்மாவின் தத்துவஞானம் தோன்றாதென்பதும் மறுக்க முடியாத உண்மையாம் என்றபடி)

# மயில்வாகனக் கடவுள்



வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

முருகனுடைய வாகனங்களில் தலைமை யானது மயில் வாகனம், யானை, ஆட்டுக்கிடாய் என்னும் இரண்டிலும் அவன் ஏறி வருவதுண்டு. என்றாலும் அவனை மயில் வாகனக் கடவுள் என்றே யாவரும், போற்றுகிறார்கள். அவனுக்கு எப்போதும் மயில் வாகனம் உண்டு. அது பிரணவ சொரூபம். **'ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட தாடும் மயில் என்ப தறியேனே'** என்று அருணகிரிநாதர் பாடுகிறார். அவன் சூரபன்ம னோடு போர் புரிந்தபோது ஒரு சமயம் இந்திரன் மயல் வாகனமாக அவனைத் தாங்குகிறான். சூரபன்மன் சேவலும் மயிலுமாக மாறியபோது மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டான் முருகன். ஆகவே அவனுக்கு மூன்று வகையான மயில்கள் வாகனம் ஆயின.

"சுப்பிரமணிய சுவாமி மயில் வாகனத்தில் இருக்கிறமாதிரி" என்று ஒரு பழமொழி உண்டு. சில பழமொழிகளுக்கு நியாயமான பொருள் ஒன்றிருக்கத் தவறான பொருள் ஒன்று வழங்கு வதும் உண்டு. இந்தப் பழமொழிக்கும் அப்படி ஓர் அர்த்தம் சொல்வதுண்டு. சூரனே மயிலாக இருக்கிறான். அவன் எந்தச் சமயத்திலும் தன்னைக் கவிழ்த்து விடுவான் என்று எண்ணி முருகன் ஒரு காலைக் கீழே தொங்கப் போட்டபடியே அமர்ந்திருக்கிறானாம்! என்ன பைத்தியக்காரத்தனமான விளக்கம். முருகன் சூரனுக்குப் பயப்பட்டு அப்படி உட்கார்ந்திருக் கிறானா? அவன் வலிமை இல்லாதவனா?

அப்படியானால் அந்தப் பழமொழியின் கருத்து என்ன? இதைச் சற்றே ஆராயலாம்.

முருகன் பேரருளாளன், அவன் அருளைப் பெற வேண்டும் என்ற நமக்கு இருக்கும் ஆவலைவிட அதிகமாக, நமக்கு அருள் செய்ய வேண்டும். என்ற பேரார்வம் அவனுக்கு இருக்கிறது.

அவன் மனவாக்குக்கு எட்டாத பொருள் என்றாலும் அன்பர்களுக்கு அருள் செய்வதற் காக, "கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு" எழுந்தருளுகின்றான். அவன் இருக்கும் இடத்தை அறிந்து அணுகுவ தென்பது நம்மால் முடியாத காரியம். ஆகவே, அவன் நமக்கு அருள் புரியும் பொருட்டு, எழுந் தருளுகிறான். அவன் வாகனம் உடையவனாக இருப்பதில் ஒரு குறிப்பு இருக்கிறது. பக்தர்கள் உள்ள இடத்தை நாடிச் செல்கிறவன் அவன் என்பதையே அது புலப்படுத்துகிறது.

டாக்டர் ரங்காச்சாரியார் என்ற மிகப் பெரிய மருத்துவர் ஒருவர் இருந்தார். அவரைத் தெய்வமாக எண்ணி மதித்தவர் பலர். மிக்க கைராசி உடையவர். அந்தக் காலத்தில் மிகவும் விலையுள்ள "ரோல்ஸ் ராய்ஸ்" காரை அவர் வாங்கினார். அதைக் கண்ட செல்வர் ஒருவர் அவரிடம், "எதற்காக இவ்வளவு பணம் போட்டு இந்தக் காரை வாங்கினீர்கள்?" என்று கேட்டார். டாக்டர் அந்தச் செல்வரைப் பார்த்து, உங்கள் வீட்டை எவ்வளவு பணம் செலவழித்துக் கட்டினீர்கள்?" என்று கேட்டார். "ஒரு லட்சத்துக்கு மேல் இருக்கும்" என்றார் செல்வர். "அவ்வளவு பணம் போட்டு எதற்காக வீட்டைக் கட்டினீர்கள்?!" என்று டாக்டர் கேட்டார்.

"நான் அந்த வீட்டில் வாழ்கிறேன். எனக்கு வசதி வேண்டாமா?" என்று கூறினார் செல்வர். "நானும் என் காரில் வாழ்கிறேன். என் உல்லாசப் பயணத்துக்காக அதை வாங்க வில்லை. "நோயாளிகளைப் பார்க்கப் போகும் போது வேகமாகச் சென்றால் அவர்களுக்கு

நன்மை என்பதைக் கருதியே வாங்கினேன்." என்று டாக்டர் விளக்கினார். பிற்காலத்தில் அவர் ஒரு விமானமே வாங்கிப் பயன்படுத்தினார். நோயாளிகள் உள்ள இடத்தை நாடிச் செல்லும் போது தாமதமாகக் கூடாது என்ற எண்ணத்தால் அவர் வேகமான வாகனங்களைப் பயன் படுத்தினார். வெறும் படாடோபத்திற்காக அவற்றை வாங்கவில்லை அவ்வண்ணமே இறைவனும் தன் பக்தர்களுக்கு அருள் புரிவதற்காகவே ஊர்தியில் எழுந்தருளுகிறான்.

திருக்கோயில்களில் மூலமூர்த்தி, உற்சவ மூர்த்தி என்று இருவகை மூர்த்திகள் உண்டு. சிவலிங்கம் மூலமூர்த்தி. நடராஜர், சோமஸ்கந்தர் முதலாய மூர்த்திகள் உற்சவ மூர்த்திகள் மூலமூர்த்தி கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளி நித்திய பூஜையை ஏற்றருளுவார். உற்சவ மூர்த்தி விழாக் காலங்களில் வெளியில் உலா வருவார்; ஊர்வலமாக எழுந்தருளுவார். உற்சவ மூர்த்திக்கு அலங்காரம் அதிகம். நாளைக்கு ஒரு கோலமாக அலங்கரிப்பார்கள். ஆடை, அணிகள், மலர் மாலைகள் எல்லாம் மிகுதி யாக இருக்கும். நாளுக்கு ஒரு வாகனத்தில் வருவார். கொட்டு மேளம், வாண வேடிக்கை பஜனை, வேதபாராயணம் முதலிய ஆடம் பரங்கள் அதிகம். அவையெல்லாம் எதற்காக?

நுட்பப் பொருளாக இருக்கும் இறைவன் அன்பர்களுடைய உள்ளத்தில் தன் பல்வேறு வடிவங்களைக் காட்டுகிறான். அவன் அருளே கண்ணாக அன்பர்கள் அவற்றைக் காணுகிறார்கள். பக்குவம் இல்லாதவர்களும் தரிசித்துப் பயன்பெற, அந்த வடிவங்களை விக்கிரமாக வடித்து வழிபட ஆகம வாயிலாக இறைவன் உணர்த்தியிருக்கிறான். திருக்கோயில் அமைப்பு, மூர்த்திகளின் இலக்கணம், வழிபாட்டு முறை உற்சவமரபு முதலியவற்றை ஆகமங்கள் சொல்கின்றன.

நாம் வழிபட்டு உய்வதற்காகக் கோயில்கள் இருக்கின்றன. என்றாலும் பலர் கோயிலுக்குப் போவதில்லை. "உங்கள் ஊரில் எனக்கென்று ஒரு இடத்தை நிறுவிக் கொண்டு வந்து தங்கியிருக்கும் என்னை வந்து பார்க்காமல் இருக்கிறாயா? உன்னை நான் விடப்போவ தில்லை. நீ இருக்கும் வீட்டு வாசலுக்கே வந்து உன்னை இழுக்கிறேன் பார்" என்று சொல்வதைப் போல, இறைவன் உற்சவ மூர்த்தியாக உலா வருகிறான். வாத்தியங் களையும், வாண வேடிக்கைகளையும் பார்க்க வீட்டை விட்டு வெளியே வருகிற ஒருவன் இறைவனையும் தரிசிக்கிறான். அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள முயல்கிறான். நாளடைவில் பக்தனாக மாறுகிறான். கோயிலுக்குச் சென்று வழிபட்டு உள்ளம் உருகாதவனை உற்சவ மூர்த்தி அவன் வீட்டு வாசலில் வந்து நின்று சேவை சாதித்து உருகச் செய்து விடுகிறார். இதை,

**'நையாத உளத்தினரை நைவிப்பான் இத்தெருவே**
**ஐயா நீஉலாப்போந்த அன்றுமுதல்'**

என்று திருவிசைப்பா புலப்படுத்துகிறது. அருட்பிரகாச வள்ளலார் **'கண்டாரை மயக்க வேடங்கட்டியாளுகின்றவர்க்குத் தெண்டனிட்டேன் என்று சொல்லடி'** என்று பாடுவதிலும் இந்தக் கருத்து இருக்கிறது. ஆகவே இறைவன் வாகனத்தில் எழுந்தருளுவது அவனுடைய கருணையைக் காட்டுகிறது. நம்மை ஆட்கொள்வதில் அவனுக்குள்ள வேகத்தைக் காட்டுகிறது.

முருகனைத் தரிசிக்க வேண்டுமானால், ஒன்று நாம் அவன் இருக்கும் இடத்துக்குப் போக வேண்டும்; அல்லது நாம் இருக்கும் இடத்துக்கு அவன் வர வேண்டும். அவன் இருக்கும் கந்தகிரியை அடைவதென்பது இயலாத காரியம். அவன் நேரே நம்மிடத்திற்கு வந்தால், அவன் அருமைப் பாடு நமக்குத் தெரியாமல் போய்விடும்தான். தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை. உறையும் இல்லை அல்லவா?

ஒரு வீட்டில் ஏழை ஒருவன் குடியிருக்கிறான். அடுத்த பெரிய வீட்டில் பெரிய செல்வன் வாழ்கிறான். இருவருக்கும் குழந்தைகள் உண்டு. வாசலில் ஒரு நாய் போகிறது. ஏழை வீட்டு குழந்தை தன் கையில் இருக்கும் கொட்டாங்கச்சியை அந்த நாயின் மேல் வீசுகிறது. பக்கத்து வீட்டில் உள்ள செல்வனுடைய குழந்தை அதைப் பார்க்கிறது. அது தன் கையில் பொற்கிண்ணத்தில் சோறு வைத்துக் கொண்டு தின்னுகிறது. அடுத்த வீட்டுக் குழந்தை நாயின் மேல் எதையோ வீசுவதைக் கண்டவுடன் தானும் அதன் மேல் எதையாவது எறிய எண்ணுகிறது. குழந்தைக ளுக்கு இது இயல்பு. ஒரு குழந்தை ஒன்று செய்தால் அதைப் பார்த்து மற்றக் குழந்தையும் அதைச் செய்ய முற்படும். ஆகவே இந்தச் செல்வக் குழந்தை தன் கையில் உள்ள தங்கக் கிண்ணத்தை அந்த நாயின் மேல் வீசி விடுகிறது. அதற்கு அந்த கிண்ணத்தின் அருமை தெரியாது. அவ்வாறே பக்குவம் இல்லாதபோது, நாம் அருளுக்காக ஏங்காத போது, ஆண்டவன் அருள் வழங்கப் புகுந்தால் அவனுடைய அருமை நமக்குத் தெரியாமல் போய்விடும். இதை மணிவாசகர் சொல்கிறார்.

**மைஇ லங்குநற் கண்ணி பங்கனே**
**வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்**
**கைஇ லங்கு பொற்கிண்ணம் என்ற லால்**
**அரியை என்றுனைக் கருது கின்றிலேன்**

(மழக்கை - மழவின்கை; குழந்தையின் கை)

மாணிக்கவாசகரே அப்படிச் சொல்லும்போது நாம் எல்லாம் எந்த மூலை?

எனவே இறைவன் நேரே வந்து நம்மை அணுகினால் அவனை நாம் சரியாக மதிப்பிடாமல் போய் விடுவோம். நாம் அவனுக்காக ஏங்க வேண்டும்; அவனை நாடிச் செல்ல வேண்டும். நாம் தன்னை நாடி வருவதை அறிந்து அவனும் நம்மை நாடி வருவான். தளர் நடையிட்டு வரும் குழந்தையைத் தாய் ஓடிச் சென்று அணைப்பது போல, நாம் அவனை நோக்கி ஓரடி வைத்தால் அவன் நம்மை நோக்கி நூறடி வைத்து வருவான்.

இப்படி அவனை நோக்கி நாம் போக, நம்மை நோக்கி அவன் வர நல்வினை கூட்டுவிக்கும் போது அவனைச் சந்திப்போம். சந்திப்பதாவது இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் வரும்போது நிகழும் செயல். "நம் குழந்தை நம்மை நோக்கி வருகிறான்; நாம் இருக்கும் இடம் வரைக்கும் நடந்தே வரட்டும்" அவன் இருக்கமாட்டான். சிறிது தூரம் வந்தாலும் "அவன் உள்ளத்தில் நம்மை அடைய வேண்டும் என்ற ஆவல் மிகுதியாக இருக்கிறது. ஆகவே நாம் அவனை ஆட்கொள்ளச் செல்லவேண்டும்" என்று அவன் வருவான். இருவரும் சந்திக்கும்போது அவன் அருள் நம்பால் பதியும். நாம் அவன் இருக்கும் இடம் வரையில் போக இயலாவிட்டாலும் அவன் வரும் வழியில் சென்று சந்திக்கலாம். இதை அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

**சிந்திக்கிலேன், நின்று சேவிக்கிலேன்**
**தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன்**
**ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்**
**வாகனனைச் சந்திக்கிலேன்**

மயில் வாகனத்தின் மேல் ஏறி வரும் முருகப் பெருமானை நான் சென்று சந்திக்கவில்லையே என்று அவர் வருந்துகிறார். முருகன் தன் பக்தர்கள் தன்னைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே மயிலின் மேல் உலா வருகிறான்.

அவன் எவ்வெப்போது வருவான்? எப்போதுமே முருகன் மயில் வாகனத்தில் ஏறி வந்துக்கொண்டிருக்கிறானாம். யாரேனும் அன்பன் தன்னைத்தேடி வந்து ஏமாறக் கூடாதென்று எப்போதும் அவன் சஞ்சரித்துக்கொண்டே இருக்கிறானாம்,

'நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்;
எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன்
வருவான்'

என்று கந்தலங்காரத்தில் அருணகிரி நாதர் பாடுகிறார்.

முருகன் எந்த நேரத்திலும் மயிலின் மேல் வருவான்; எப்போதும் அவன் மயிலின்மேல் ஆரோகணித்து இருக்கிறான். அன்பர்கள் அழைக்கும்போது உடனே போய்ச் சேரும் வகையில் அவன் மயிலை நடத்திக்கொண்டு சுற்றி வருகிறான். இது அவன் பெருங் கருணையைக் காட்டுகிறது. அவன் கருணை இன்ன இடத்தில் இன்ன காலத்தில் தான் கிடைக்கும் என்பதில்லை. அவன் எந்த நேரத்திலும் நமக்கு அருள் செய்யும் பொருட்டு அதற்கு ஏற்ற நிலையில் மயில் வாகனத்தில் எழுந்தருளி வருகிறான்.

இந்த மாபெருங் கருணையைக் குறிப்பதுதான் "சுப்பிரமணிய சுவாமி மயில் வாகனத்தில் இருக்கிற மாதிரி" என்ற பழமொழி.


நன்றி - கலைமகள்

✡

# நினைவிற் கொள்வதற்கு

விய
புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01. | 17. 09. 2006 | ஞாயிறு | மாதப்பிறப்பு |
| 03. | 19. 09. 2006 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 05. | 21. 09. 2006 | வியாழன் | அருணந்தி சிவாசாரியார் குருபூசை |
| 06. | 22. 09. 2006 | வெள்ளி | அமாவாசை விரதம், மஹாளய பக்ஷ முடிவு |
| 07. | 23. 09. 2006 | சனி | நவராத்திரி விரதாரம்பம் |
| 10. | 26. 09. 2006 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 12. | 28. 09. 2006 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| 13. | 29. 09. 2006 | வெள்ளி | சரஸ்வதி பூஜாரம்பம் |
| 15. | 01. 10. 2006 | ஞாயிறு | சரஸ்வதி பூஜை |
| 16. | 02. 10. 2006 | திங்கள் | விஜயதசமி, கேதார கௌரி விரதாரம்பம், ஏனாதி நாதர் குருபூசை |
| 18. | 04. 10. 2006 | புதன் | பிரதோஷ விரதம், நரசிங்க முனையர் குருபூசை |
| 19. | 05. 10. 2006 | வியாழன் | நடேசரபிஷேகம், கடையிற் சுவாமி குருபூசை |
| 20. | 06. 10. 2006 | வெள்ளி | பூரணை விரதம் |
| 22. | 08. 10. 2006 | ஞாயிறு | உருத்திர பசுபதியார் குருபூசை |
| 24. | 10. 10. 2006 | செவ்வாய் | கார்த்திகை விரதம் , சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 25. | 11. 10. 2006 | புதன் | திருநாளைப் போவார் குருபூசை |



# சற்றே விலகி இரும் பிள்ளாய்

சிவ பக்தியில் சிறந்து விளங்கிய நந்தனார், சிவாலயங்களை வணங்கி மகிழ்வதில் தனியொரு நாட்டம் கொண்டிருந்தார்.

எப்படியாவது தில்லைக்குச் சென்று ஆனந்த தாண்டவ மூர்த்தியைக் கண்டு தரிசனம் பெற்றிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் அவருக்கு வேலைச் சுமையிருந்ததால், 'நாளை போவேன், நாளை போவேன்' என்று நாளைக் கடத்தி வந்தார். அதனாலேயே திருநாளைப் போவார் என்ற சிறப்புப் பெயரை அடைந்தார். எனினும் அவருக்கு விருப்புடைய ஊராகிய திருப்புன்கூர் வருவார். அவருக்கு இருந்த இறையன்பில் நேரே கருவறைக்குள் சென்று வழிபடத்தான் ஆசை. ஆனால் அக்கால கலாசாரம் அதற்கு இடம் தரவில்லை. தேரடியில் நின்று எம்பெருமானை வழிபட்டு வந்தார்.

என்றாலும் சிவலோகநாதரின் திருமேனி யழகைக் கண்டு இன்புற வேண்டிப் பெரிதும் ஆதங்கப்படலானார். சந்நதிக்கு முன்னால் 'நந்தி தேவர் அமர்ந்திருந்து பெருமானை மறைக்கிறாரே! அவர் சற்று விலகியிருந்தால் எம்பெருமானை ஆசை தீர வணங்கி மகிழலாமே' என்று உள்ளம் கசிந்து குழைந்து உருகி நிற்பார். அவரது உருக்கமான பக்திக்கு நெகிழ்ந்த இறைவன், தனக்கு எதிரே வீற்றிருந்த நந்தியை நோக்கி, 'என் பக்தன் மெய்யுருகி நிற்கின்றான். நீ சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று பணித்தருளினார்.

இந்த அற்புதத்தை நினைவுறுத்தும் வண்ணம் இன்றும் திருப்புன்கூர் சிவலோக நாதர் ஆலய நந்தி சந்நதியை விட்டு விலகியே காட்சி அளித்து வருகிறது.

'எம்பெருமான் தம்மை விலகியிருக்கும்படி பணிக்கிறாரே அப்பேற்பட்ட புனித பக்தன் யாராக இருக்க முடியும்? என்று நம்மிடமே கேட்பதுபோல அமைந்துள்ள நந்தியின் கண்கள், இந்த மருட்சியில் தம் நாவையும் உள்ளே இழுத்துக்கொண்டிருக்கிறார் நந்தி தேவர். எங்கும் வாயின் மேல் பக்கமாக நாவை மடித்திருக்கும் நந்திகளையே பார்த்துப் பழகி விட்ட நமக்கு இந்த நந்தி கொஞ்சம் வித்தியாசமாகவே தோன்றுவது அரிய காட்சிதான். உருவ அசத்தலில் தஞ்சை நந்திக்கு தம்பியாக இருக்கிறார் என்றே இவரை வர்ணிக்கலாம்.

சிவலோக நாதராகிய ஈசன், இங்கே புற்று மண் வடிவில் சுயம்புவாக எழுந்தருளியிருக் கிறார். இவர் மேல் சாத்தப்பட்டுள்ள குவளைக்குத்தான் நித்தமும், அபிஷேகம் நடைபெறுகிறது. சோம வாரம் எனப்படும் திங்கட்கிழமைகளில் அர்த்தஜாம பூஜை விசேஷம். அப்போது புற்று மண்ணாக இருக்கக்கூடிய சிவலிங்கத்துக்கு புனுகு சட்டம் சாத்தப்படுகிறது.

அம்பாளுக்கு சௌந்தரநாயகி என்று பெயர். சிவலோகநாதரும், சௌந்தர நாயகியும் தனித் தனியே சந்நதி கொண்டிருந்த போதிலும் இருவருமாகச் சேர்ந்து சோமஸ்கந்தர் நிலையிலும் காட்சி அளிக்கின்றனர். பெரிய நந்தி, பெரிய வடிவமுடைய சோமாஸ்கந்தர் என்று எல்லாமும் இங்கே பெருமைதான்.

கருவறையைச் சுற்றியுள்ள தேவ கோட்டங்களில் காணப்பெறும் நர்த்தன விநாயகர், பிட்சாடனர், அகத்தியர், தட்சிணாமூர்த்தி, மாலும் அயனும் தொழும்படியான லிங்கோத்பவர், பிரமன், துர்க்கை, அர்த்தநாரீஸ்வரர், பைரவர் முதலான தெய்வ மூர்த்தங்கள் அழகானவை.

இங்குள்ள ஆடற்பெருமானின் திருவடியின் கீழ் தேவகணம் ஒன்று பஞ்சமுக வாத்தியம் வாசிப்பதையும் பார்க்கத் தவறிவிடக் கூடாது.

குளக்கரை விநாயகரைத்தான் எங்கும் பார்த்திருக்கிறோம். இங்கே குளம் வெட்டிய விநாயகரைப் பார்த்திருக்கின்றோம். நந்தனாருக்காக ஓரே இரவில் குளம் வெட்டியதால் இப்பெயரைப் பெற்றுள்ளாராம்.

இக்கோயிலின் இரண்டாம் பிராகாரமாகிய வடக்குப் பிரகாரத்தை வலம் வரும்போது புங்க மரத்தையும், அதனையொட்டிய பஞ்சலிங்க மேடையையும் காணலாம். பிரம்ம தேவருக்காக இறைவன் ஐந்து முகங்களோடு காட்சி அளித்த வரலாற்றை நினைவூட்டுகிறது இந்த பஞ்சலிங்க காட்சி.

தேரடியில் நின்று தொழுத நந்தனார், அதே தேரடியில் சிலையுருவில் எழுந்தருளியிருப் பதைப் பார்க்கலாம். இவருக்குக் கோயிலின் உட்சுற்றின் இருமருங்கிலும் சிறு கோயில் அமைந்துள்ளது. எழுந்தருளும் திருமேனியரா கவும்கூட இவர் காட்சியளிப்பது சிறப்பிலும் சிறப்பு. அன்றைய சமூகம் இவரை கோயில் வெளியே நிற்க வைத்தது . இன்று அதே கோயிலில் உள்ளும் புறமும் இவர் அருள் உரு கொண்டிலங்குவது நெஞ்சைக் குளிர்விக்கிறது.

ராஜேந்திர மன்னன் காலத்தில் மழையின்றி வருந்தியிருந்த நேரம். திருப்புன்கூர் இறைவனை வழிபட சுந்தரமூர்த்தி நாயனார் வருகிறார். மன்னன், சுந்தரரை வணங்கி 'மழைக்கு அருள் செய்யுமாறு' வேண்டுகிறான். சுந்தரரும் இசைகிறார் - ஒரு நிபந்தனையோடு. திருப்புன்கூர் நாதருக்கு பன்னிருவேலி நிலம் அளிப்பதாக உறுதி செய்து கொடுத்தால் மழையை வரவழைப்பேன் என்கிறார். அதற்கு மன்னனும் ஒப்புக் கொள்கிறான். சுந்தரரின் சுந்தரத் தமிழ், மழையை வரவழைக்கிறது. மழையோ பெய்யெனப் பெய்து பெருமழையாகி.. ஊரே வெள்ளக்காட்டில் மிதக்கிறது. "போதும்.... போதும்...மழையை நிறுத்தி விடுங்கள் சுவாமி!" என்கின்றான் மன்னன் "மழையை நிறுத்துவதனால் மேலும் பன்னிரண்டு வேலி நிலம் அளிக்க வேண்டும்" என்கிறார் சுந்தரர். மன்னன் அதற்கும் சம்மதிக்கிறான். சுந்தரரின் தமிழ், மழையை நிறுத்தி விடுகிறது. இங்கு வந்து வழிபட, ஜென்மாந்திரங்களில் செய்த பாவங்களும் விலகும் என்று பாடியிருக்கிறார் திருஞான சம்பந்தர். திருநாவுக்கரசரோ, பாட்டுக்குப் பாட்டு, திருப்புன்கூர் மேவிய சிவலோகன் என்றே சொல்லி மகிழ்கிறார்.

தஞ்சாவூர் வைதீஸ்வரன் கோவிலிலிருந்து மேற்கே 3 கி.மீ தொலைவில் இருக்கிறது திருபுன்கூர் சிவலோகநாதர் திருக்கோவில்.

நன்றி : பக்தி ❀

**சைவநீதி மாத இதழ்**

பெறுமதி விபரம்

**தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15**

***சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.***

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 0779008286*

# சந்தேகம் தெளிதல்

பதில்கள் : தெய்வத்திரு. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

கேள்வி : ஆன்மாவிற்கு அழிவில்லை என்னும் பொழுது இறந்தவர்களுக்கு ஏன் ஈமச் சடங்குகள் செய்கின்றார்கள்?

பதில் : ஈமச் சடங்குகள் எல்லாம் பொருள் செறிந்தவை ஆகும். இறந்த தந்தைக்குமுன் மைந்தன் தோளில் நீர் நிறைந்த குடத்தை வைத்துக் கொள்வான். நாவிதனார் தண்ணீர்க் குடத்துடன் மூன்று முறைச் சுற்றச் செய்து மூன்று ஓட்டையிட்டு, ‘அப்படியே உடைத்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் போ’ என்பார்.

தண்ணீர்க் குடமென்பது சரீரம். அதில் நிறைந்த தண்ணீர் ஜீவாத்மா. முதலில் இட்ட ஓட்டை தனேஷணை. (பணத்தாசை). இரண்டாவது இட்ட ஓட்டை தாரேஷணை (மனைவி மேல் வைத்த ஆசை). மூன்றாவது இட்ட ஓட்டை புத்ரேஷணை (மக்கள் மேல் வைத்த ஆசை) இந்த மூன்று ஆசைகளாகிய ஓட்டைகளின் வழி சரீரத்திலிருந்த ஆத்ம சைதன்யமாகிய உயிர் சிந்தி விட்டது. இந்த ஆசாபாசத்தைத் திரும்பிப் பாராமல் நீ அறநெறியில் செல்வாயாக என்ற குறிப்பை நாவிதனார் காட்டுகின்றார்.

இதை அருணகிரிநாதர்,

**‘மாவேழ் ஜனனங் கெடமா யைவிடா**
**மூவே டனைஎன் றுமுடிந் திடுமோ?’** என்று கூறுகின்றார்.

நமது முன்னோர்கள் செய்த சடங்குகள் அர்த்தமற்றவை என்று தள்ளாமல் நுனித்து உணர்வது மதியுடமையாகும். இறந்த ஆன்மாக்களுக்குச் செய்யும் வழிபாடுகள் அவர்களுக்கு நாம் செய்கின்ற நன்றிக் கடனாகும்.

**‘தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’**

இனி, இறந்தவர்களைக் குறித்துச் செய்யும் சடங்குகளைக் கண்டு அந்த ஆன்மாக்கள் மகிழ்ச்சியடைகின்றன. திருப்தியும் அடைகின்றன. இறந்தவர்கள் பொருட்டு நாம் செய்கின்ற தான தர்மத்தின் பயன் அவர்களைச் சார்ந்து அவர்கள் நன்மை அடைகின்றார்கள்.

இறந்த தமது தந்தை பாண்டுவின் பொருட்டுப் பாண்டவர்கள் செய்த ராஜசூய வேள்வியின் பயனால் பாண்டு நற்கதி பெற்றான் என்று மகாபாரதம் கூறுகின்றது.

இறந்த உயிர்கள் சூட்சும சரீரத்தோடு உலாவுகின்றன. நாம் அவர்களுடைய உருவப் படத்தை வைத்து அவர்களுக்குப் பிரியமான பொருள்களை வைத்துப் படைப்பதால் அந்த உயிர்கள் திருப்தி அடைகின்றன.

Regd No. QD/65/News 2006 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed By: Chemax Prints (PVT) LTD, No: 07, Charles Place, Dehiwala.
email@chemaxprints.com Tel:2723963, Fax:94-11-2737127